


விருதுநகரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களின் தாயார் மறைந்த அமராவதியம்மாள் அவர்களின் உடலுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார். உடன் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், கோ.தளபதி, தங்கப் பாண்டியன், ரெகுநாதன், ஒன்றியச் செயலாளர்கள் பொன்னுத்தம்பி, முருகேஷன், முனியாண்டி, மல்லி ஆறுமுகம், விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், காரியாபட்டி செந்தில், இளைஞர் அணி கே.ஜி.ராஜகுரு, கிருஷ்ண குமார், இலக்கிய அணி மலையரசன், மதுரை வைகைப் பரமன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தனுஷ் கோடி, வி.பி.ராஜன், அருப்புக்கோட்டை சேர்மன் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி மற்றும் கழகத் தொண்டர்கள் அஞ்சலி செலுத்தினர்.

## 50வது நினைவு தினம்: சென்னை அண்ணா சாலையில் உள்ள

# தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு - இன்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

### கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் - பொருளாளர் டி.ஆர்.பாலு - முன்னணியினர் பங்கேற்பு!



சென்னை, டிச.24-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளான இன்று (24.12.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

**நே.சிற்றரசு**

நாள் : 22-12-2023 செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில்

# அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் ஆய்வு!

செஞ்சி, டிச. 24-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் செஞ்சிமஸ்தான்கலந்து கொண்டு தமிழக அரசு மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி தலைமை தாங்கினார். ஆய்வு கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மக்களுக்கும் அனைத்து திட்டங்களும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் செஞ்சி வட்டத்தில் முதியோர் உதவித்தொகை மாற்றுத்திறனாளி உதவித்தொகை இலவச வீட்டுமனைப் பட்டா புதிய மின்னணு குடும்ப அட்டை ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரம் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் புதுமைப் பெண் திட்டம் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களின் மீது தீர்வு காணப்பட்ட விவரம் முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட விவரம் குறித்து கேட்டறிந்ததுடன்தற்பொழுது நிலுவையில் உள்ள மனுக்களின் விவரம் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதுடன் பொது மக்களின் கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காண்பதுடன் வளர்ச்சித் திட்டப்பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என அனைத்துத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக செஞ்சி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல் ல்பாடுகள் குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வுக்காகவும் மற்றும் பயிற்சிக்காகவும் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாமினை அமைச்சர் செஞ்சிமஸ்தான் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷுநிகம், வட்டாட்சியர் ஏழுமலை, செஞ்சி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார். பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், செஞ்சி ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மேல்மலையனூர் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், வீட்டு வசதி வாரியத்தின் புதிய பொலிவூட்டப்பட்ட இணையதளத்தை நேற்று முன்தினம் (22.12.2023) கோயம்பேடு, வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில் தொடங்கி வைத்தார். வாரிய மேலாண்மை இயக்குநர் எ.சரவணவேல்ராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, வாரிய நிதி ஆலோசகர் அன்பழகன், தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வாரிய தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, மாவட்ட வருவாய் அலுவலர் (திட்டங்கள்) திருமதி. ஃபர்கத் பேகம், வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அன்பழகன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## திருப்பூர் ஊத்துக்குளி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.2.31 கோடியில் புதிய திட்டப்பணிகள் - ரூ.63.16 இலட்சத்தில் முடிவுற்ற பணிகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து - முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!

திருப்பூர், டிச. 24-

திருப்பூர் ஊத்துக்குளி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.2.31 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, ரூ.63.16 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) ராம்குமார் தலைமையில், திருப்பூர் ஒன்றியம் கணக்கம்பாளையத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.87.74 மதிப்பீட்டில் கே.ஆண்டி யாளையம் பெருமாநல்லூர் வரை சாலை பலப்படுத்தும் பணி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.7.22 இலட்சம் வாஷிங்டன் நகர் பொள்ளாச்சிக்காரரர் வீடு முதல் குறுக்குவீதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, ரூ.4.43 இலட்சம் மதிப்பீட்டில் வாஷிங்டன் நகர் பேன்சி கடைக்காரரர் வீதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, ரூ.2.09 இலட்சம் மதிப்பீட்டில் வாஷிங்டன் நகர் பொம்மைக்காரரர் வீடு வீதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, ரூ.2.09 இலட்சம் வாஷிங்டன் நகர் வெள்ளியங்கிரி வீடு முதல் பம்ப் ரூம் வரை பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, ரூ.6.05 இலட்சம் மதிப்பீட்டில் வாஷிங்டன் நகர் தென்னவன் வீடு முதல் மேற்த எல்லைவரை பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, ரூ.2.36 இலட்சம் மதிப்பீட்டில் வாஷிங்டன் நகர் வடக்கு உரக்குழி சாலையில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, ரூ.46.11 இலட்சம் மதிப்பீட்டில் வாஷிங்டன் நகர் ரேஷன்கடை முதல் விநாயகர் கோவில் வழியாக செந்தூர் கார்டன் வரை பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, 15 வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் அய்யம்பாளையம் ஆதி காலனி வடக்கு பகுதியில் வடிகால் அமைக்கும் பணி, ஊராட்சி ஒன்றிய பொதுநிதியின் கீழ் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் அய்யம்பாளையம் டெக்மா நகர் எண்ணெய் கடைக்காரர் வீதியில் வடிகால் அமைக்கும் பணியினை துவக்கி வைத்து, சொக்கனூர் ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.40.00 லட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருந்தக கட்டடம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கட்டடத்தை திறந்து வைத்து, ஊத்துக்குளி ஒன்றியம், செங்கப்பள்ளி ஊராட்சி பழனிக்கவுண்டன்பாளையத்தில் ஊராட்சி ஒன்றிய பொதுநிதி மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் நிதியின் கீழ் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் பழனிக்கவுண்டன் பாளையம் முதல் காங்கேயம் பாளையம் வாலை வரை தார் சாலை மற்றும் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, 15வது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் பழனிக்கவுண்டன் பாளையத்தில் ரூ.9.52 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டியினையும், ஆ.பெரியபாளையம் ஊராட்சி கோவிந்தம்பாளையத்தில் 15வது மத்திய நிதிக்குழு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் நீர் தேக்க தொட்டி என மொத்தம் ரூ.2.94 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.


அமைச்சர் தெரிவித்ததாவது :தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக் கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000 என்கிற மகத்தான திட்டத்தை வழங்கியது வரை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு /பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு/ தொழிற் கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வரும் புதுமைப்பெண் என்கிற திட்டத்தை துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் சுய உதவிக்குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்ச ரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, மக்களை தேடி மருத்துவம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர், தினேஷ்குமார், பிரேமா ஈஸ்வரமூர்த்தி, சண்முகசுந்தரம், எஸ்.எம்.பி.மூர்த்தி, பி.பி.ஈஸ்வரமூர்த்தி, எஸ்.விஸ்வ நாதன், சுப்பிரமணியம், ஈ.தங்கராஜ், க.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை ஏ.ஆர்.சந்திரன்

**டிசம்பர் 24 (2008)**



பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்றுக் கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்துவுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.

கழகம் தொடங்கிய காலத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் “மறுமலர்ச்சி படிப்பகம்” என்ற படிப்பகத்தைத் தொடங்கி அதில் முரசொலி, நம்நாடு, திராவிட நாடு போன்ற ஏடுகளை வழங்கி கழகத் தோழர்களையெல்லாம் படிக்க வைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களிடம் சிறந்த கூட்டுறவு வங்கி என்ற பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## முன்னாள் எம்.பி. பி.ஆர்.ராமகிருஷ்ணன் மனைவி

# ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆர்.பிரபுவின் தாயார் திருமதி ராஜேஸ்வரி ராமகிருஷ்ணன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 24-

“கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி” வருமாறு:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் பி.ஆர்.ராமகிருஷ்ணன் அவர்களின் துணைவியாரும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆர். பிரபு அவர்களின் தாயாருமான திருமதி. ராஜேஸ்வரி ராமகிருஷ்ணன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தாயார்

# திருமதி அமராவதி அம்மாள் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 24-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களின் தாயார் திருமதி.அமராவதி அம்மாள் அவர்களின் மறைவுக்கு தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-


வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சரும் விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களின் தாயார் திருமதி. அமராவதி அம்மாள் அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறைவெய்திய செய்தி கேட்டு மிகவும் வருத்தமுற்றேன்.

அன்பின் திருவுருவான அன்னையை இழந்து தவிக்கும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தொலைபேசி மூலம் இரங்கல்!**

மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.



கோவை மண்டல ஆதிதிராவிடர் நலக்குழு கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்து கொண்டு பேசினார். இதில் மாவட்ட அமைப்பாளர்கள் கோவை மாநகரம் டெம்போ சிவா, கோவை வடக்கு வழக்கறிஞர் தென்னை சிவா, கோவை தெற்கு கிணத்துக்கிடவு ஞானசேகரன், திருப்பூர் வடக்கு பழனிச்சாமி, திருப்பூர் தெற்கு கன்னிமுத்து, மாநகர் திருப்பூர் வடக்கு துரைசாமி, மாநகர் திருப்பூர் தெற்கு குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.